**பிப்ரவரி - 28**

**"நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல், எல்லாவற்றையுங்குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள்." - பிலி 4 : 6**

நமக்குத் தேவையாயிருக்கிறது என்று அவர் காண்கிற பொருள்களை நாம் அவரிடம் வேண்டுதல் செய்யாமலும் அவருடைய வாக்குத்தத்தங்களின் உபாத்தியத்தைக் கொண்டாடாமலும் இருக்கையில், ஏன் தேவன் நமக்கு அவைகளைக் கொடுக்கமாட்டார் என்ற கேள்வி எழும்பலாம். ஏனென்றால், உண்மையாகவே அவருடைய அனுக்கிரகங்களைப் பெற்று அவைகளால் பிரயோஜனமடைவதற்கு முன்னால், தகுதியான மனப்பாங்கைப் பெற்றிருப்பது நமக்கு அவசியமாயிருக்கிறது. இருக்கிற பிரகாரமாகவும் இதுவரை அளிக்கப்பட்டதும், இப்போது அளிக்கப்படுகிறதுமான தெய்வீகக் கவனிப்பையே போதுமானபடி நாம் உயர்வாக மதிக்கிறதில்லை என்று நாம் நிச்சயமாக இருக்கலாம். இனி நாம் அறியப்பட்டிருக்கிறபடியே அறிந்து கொள்ளும்போது, சீக்கிரத்தில் இவைகளைக் காண்போம். அதன் பிரகாரமாக இப்பொழுது ஜெபம், ஸ்தோத்திரம் இவைகளின் மனப்பாங்கிலும் கூட நாம் ஒருவேளை நன்றிக்காகவுள்ள நமது காரணங்களின் ஒரு பாதியை நாம் கண்டு கொள்ளுகிறதில்லை. **– Z ’03, 8 (R 318)**

தாய் பாசத்தின் அவநம்பிக்கை ஒரு குழந்தைக்கு சம்பவிக்கிறது போல, அவ்வளவு கொஞ்சக் கவலை கிறிஸ்தவனுக்கும் பொருந்துகிறது. எந்த இருதயத்தில் தேவன் மேலுள்ள நம்பிக்கை ஆளுகிறதோ, பெற்றுக் கொண்ட அநேகக் கிருபைகளுக்காக நன்றியறிதல், இருதயமாகிய சிங்காசனத்தில் ஏற்றப்பட்டதாக உட்கார்ந்திருக்கிறதோ, கவலை அங்கு தங்குவதற்கு இடமில்லை. தேவனுடைய பிள்ளை தன்னுடைய ஒவ்வொரு தேவனுக்கும் பிரதியுத்தரஞ் சொல்லுகிற ஒரு தகப்பன் இருக்கிறார் என்பதை அறிந்திருக்கிறான். அவர் விண்ணப்பம் செய்கிற தமது பிள்ளைகளுக்கு எப்பொழுதும் அணுகக்கூடிய நிலையில் இருக்கிறார். ஆகையால், தன்னுடைய தேவைகளைத் தனது தகப்பனிடம் சொல்லிக் கொள்ளுகிறதினால், தன்னுடைய வியாகுலமாயுள்ள கவலையை வெளியே விரட்டி விடுகிறான். **-P ’35, 15.**

**ஒத்து வாக்கியங்கள் :-**

சங் 127:2; மத் 6:25-34; 13:22; லூக் 21:34; 1கொரி 7:32,33; 2தீமோ 2:4; சங் 37:5; 55:22; நீதி 16:3; எரே 17:7,8; எபி 13:5; 1பேது 5:6,7; ஆதி 32:24-29; 1சாமு 12:23; சங் 86:3,6; 131:1,2; கொலோ 4:2; மத் 15:22-28; லூக் 18:1-7;22:44; ரோம 8:26; எபே 6:18; எபி 5:7,8;

**கோபுர வாசிப்பு : Z ’14, 230 (R 5508).**

**வினாக்கள் :** இந்த வசனத்தின் சம்பந்தமாக இந்த வாரத்தின் அனுபவம் என்ன? அவை எவ்வாறு சந்திக்கப்பட்டன? அவை எதில் முடிந்தன?